**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2021**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எங்கும் நீக்கமற நிலைத்து நிற்பவர் யார்?
2. குயில்பாட்டு எந்த இடத்தில் தோன்றியது?
3. பேயரசு செய்தல் பிணந்தின்னும் சாத்திரங்கள் – யார் கூற்று?
4. பெண் விடுதலைக்காக எந்த முறையைக் கையாளுமாறு பாரதியார் அறிவுறுத்துகிறார்?
5. தமிழ்நாடு எவ்வாறு வான் புகழ் பெற்றது?
6. பாரதியின் முப்பெரும் கோட்பாடுகள் யாவை?
7. பாரதி காட்டும் புது மூலக்கூறுகள் எவை?
8. பெண்கள் பல தீமைகளிலிருந்து விடுபட எது அவசியம் என்கிறார் பாரதி?
9. உலகம் யாரால் உருவானது என்று பாரதிதாசன் கூறுகிறார்?
10. குடும்ப விளக்கு என்ற படைப்பில் தலைவியின் பெயர் என்ன?
11. நற்றமிழர் சேர்த்த புகழ் யாது?
12. தமிழ்நாட்டை எவ்வாறு பாரதிதாசன் வாழ்த்துகிறார்?

13. 'பெற்றோர் ஆவல்' என்னும் பாடலில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ள தமிழ் இசைக்கருவி யாது?
14. நாடகங்கள் எவற்றால் சிறப்பைப் பெறும்?
15. கற்பூரப் பெட்டகம் என்று பாரதிதாசன் யாரைக் குறிப்பிட்டுள்ளார்?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியார் கண்ணனை எந்தெந்த உறவுகளில் வைத்துப் பாடியுள்ளார்?
2. தமிழ்நாட்டு மாதருக்குப் பாரதியார் விடுக்கும் செய்தி யாது?
3. தீவிரவாதியாக இருந்த பாரதியார் மிதவாதியாக மாறக் காரணம் என்ன?
4. தமிழை வளம்படுத்தற்குரிய வழிகள் எனப் பாரதி குறிப்பன யாவை?
5. மதம் சமுதாயத்தில் என்ன செய்யுமென்று பாரதிதாசன் கருதுகின்றார்?
6. தலைவர் இரவில் வீட்டுக் கதவை எவ்வாறு தட்டினார்?
7. மலையின் அழகைப் பாரதிதாசன் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?
8. பிசிராந்தையார் என்னும் நாடகத்தில் இடம்பெற்றுள்ள புலவர்களின் பெயர்களை எழுதுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் பத்திரிகை பணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் தமிழ்ப்பற்று குறித்து கட்டுரை வரைக.

2. (அ) பாரதியின் உலக நோக்கிற்கு உரமிட்ட கோட்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் கண்ட இயற்கை குறித்து கட்டுரை வரைக.

3. (அ) தமிழ்மொழியும் தமிழினமும் உயர்வு எய்திட பாரதிதாசனின் காப்பியங்கள் வழிகாட்டுகின்றன என்பதை நிறுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் பெண்ணுலகம் குறித்து கட்டுரை எழுதுக.

***